சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை

முன்னிலை:- திருமதி. G. கலைவாணி, பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, ஊத்தங்கரை.

2024-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 21-ம் நாள் வியாழக்கிழமை
2055 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ குரோதி வருடம் கார்த்திகை மாதம் 06-ம் நாள் வியாழக்கிழமை

இடை நிலை மனு எண்.04/2023

இன்

அசல் வழக்கு எண்.56/2020

1. மங்கை
2. முனியம்மாள்
3. மாரி ... மனுதாரர்கள்/பிரதிவாதி

//எதிராக//

K.G. பூங்கோதை ... எதிர்மனுதாரர்/வாதிகள்

இம்மனுவானது 21.11.2024-ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. மோனிஷ் அரவிந், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. சசிகுமார் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்ததுமான இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்

உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்களுக்கு எதிராக 07.07.2022-ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்யக் கோரி மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட 626 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மனுதாரரால் சட்டப்

பிரிவு 5–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>

(2–1) மனுதாரர் அசல் வழக்கில் 2–ம் பிரதிவாதி என்றும், 1–ம் பிரதிவாதி தன் தாயார் என்றும், 3–ம் பிரதிவாதி தன் சகோதரி என்றும், அவர்களுக்காகவும் இந்த அபிடவிட் தாக்கல் செய்வதாகவும், மேற்படி வழக்கில் கடந்த 09.10.2020–ம் தேதியில் தன்னை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததாலும், தன் தரப்பில் வழக்கறிஞர் நியமனம் செய்யப்படாததாலும், தோன்றாத் தரப்பினராக கருதி 1–ம் பிரதிவாதிக்கும், தனக்கும் எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், கடந்த 02.03.2021–ம் தேதியில் ஒருதலைபட்ச தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும்,

(2–2) மேற்படி ஒருதலைபட்ச உத்தரவுகள் பிறப்பிக்கபட்ட காலங்களில் நாட்டில் நிலவி வந்த கோவிட் 19 பெருந்தொற்று சூழ்நிலையில், தாங்கள் நீதிமன்றத்திற்கு ஆஜராக இயலவில்லை என்றும், அதன் பின்னர் தங்களுக்கு வழக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றும், கடந்த 18.03.2022–ம் தேதியில் வாதியின் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கடிதம் ஒன்று வரப்பெற்றது என்றும், அதனை பெற்று பார்த்ததில் மேற்படி வழக்கில் 19.04.2021–ம் தேதியில் ஒரு மாத கால அவகாசத்திற்குள் கிரய பாக்கித் தொகையை வைப்பீடு செய்ய தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாகவும், அதன்படி நடக்க இயலாமல் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க கோரி வாதி மனு தொடர்ந்துள்ளதாகவும் தெரிய வந்தது என்றும், அம்மனுவில் தாங்கள் வழக்கறிஞர் நியமனம் செய்து எதிருரை தாக்கல் செய்துள்ளோம் என்றும்,

(2–3) மேற்படி வழக்கில் இடைமனுவில் தாங்கள் ஆஜரான பின்னர் வழக்கு கோப்பின்

நகல்களை கடந்த 07.07.2022-ம் தேதியில் பெற்று தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்யக் கோரி மனு தாக்கல் செய்ய இருந்த சமயத்தில், 1-ம் மனுதாரரான தங்களின் தாயாருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு கோயமுத்தூரில் உள்ள சித்த வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை அளித்து வந்ததாலும், தானும், 3-ம் மனுதாரரும் 1-ம் மனுதாரருக்கு துணையாக இருந்து வந்ததாலும், ஆவண நகல்கள் பெறற உடனே மனு தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், மேற்படி தவறு தற்செயலாக ஏற்பட்டது என்றும், வேண்டியோ, விரும்பியோ செய்த தவறில்லை என்றும், மேற்படி வழக்கில் தங்களுக்கு எதிராக பிறப்பித்துள்ள ஒருதலைபட்ச தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்யக் கோரி மனு தாக்கல் செய்ய 30.05.2021-ம் நாள் முதல் 23.02.2023-ம் நாள் வரை 626 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிருரையின் சுருக்கம்

(3-1) மனுதாரர்கள் அவர்களது பிரமாணப்பத்திரிக்கையில் மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட காலங்களில் நாட்டில் கோவிட் 19 பெருந்தொற்று நிலவி வந்ததாகவும், இந்த சூழ்நிலையால் மனுதாரர்கள் நீதிமன்றத்திற்கு ஆஜராக இயலவில்லை என்றும் அதன் பின்னர் மனுதாரர்களுக்கு வழக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றும் கடந்த 18.03.2022-ம் தேதியில் வாதியின் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கடிதம் ஒன்று வரப்பெற்றதை பார்த்த பிறகுதான் மேற்படி வழக்கில் 19.04.2021-ம் தேதியில் ஒரு மாத கால அவகாசத்திற்குள் கிரய பாக்கித் தொகையை வைப்பீடு செய்ய தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாகவும், அதன்படி நடக்க

இயலாமல் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க கோரி வாதி மனு தொடர்ந்துள்ளதாகவும் தெரிய வந்ததாகவும் மேற்படி வழக்கில் இடைமனுவில் மனுதாரர்கள் ஆஜரான பின்னர் வழக்கு கோப்பின் நகல்களை கடந்த 07.07.2022-ம் தேதியில் பெற்று மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்யக் கோரி மனு தாக்கல் செய்ய இருந்ததாகவும் அந்த சமயத்தில், 1-ம் மனுதாரரின் தாயாருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டு கோயமுத்தூரில் உள்ள சித்த வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை அளித்து வந்ததாகவும், 2,3-ம் மனுதாரர்களும் 1-ம் மனுதாரருக்கு துணையாக இருந்து வந்ததாகவும் எனவே ஆவண நகல்கள் பெற்ற உடனே மனுதாக்கல் செய்ய இயலவில்லை என்றும் மேற்படி தவறு தற்செயலாக ஏற்பட்டதல்ல என்றும் வேண்டியோ, விரும்பியோ செய்த தவறில்லை என்றும், எனவே மேற்படி வழக்கில் கடந்த 29.04.2021-ம் தேதியில் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பித்துள்ள ஒருதலைபட்ச தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்யக் கோரி மனுதாக்கல் செய்ய ஏற்பட்டுள்ள 626 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமும், நியாயமும் ஆவதாகவும் மனுதாரர்கள் கூறியுள்ள சங்கதிகள் யாவும் பொய்யானதும், கற்பனையானதும் மற்றும் தவறானதும் என்றும், மேலும் சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்கத்தக்கதல்ல என்றும்,

(3-2) உண்மையில் மனுதாரர்கள் அவர்களது மனு பிரமாணப்பத்திரிக்கையில் ஒப்புக் கொண்டுள்ளபடியே மேற்படி அசல் வழக்கு சான்றுறுதி அலுவலர் முன்பு உபயவாதிகளிடையே ஏற்பட்ட 12.10.2012-ம் தேதியிட்ட வழக்கு கிரைய உடன்படிக்கை ஆவணத்தை பொறுத்து ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி இந்த எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காகும் என்றும், மேற்படி அசல் வழக்கில் யாதொரு தகுதியான எதிர் வியாஜ்ஜியமும்

இல்லாத இம்மனு மனுதாரர்கள் இந்த எதிர்மனுதாரரை வீணாக அலைகழித்து அக்கிரம இலாபம் அடைய வேண்டி தீய எண்ணம் கொண்டு மேற்படி அசல் வழக்குவில் வேண்டுமென்றே அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கவிட்டு தற்பொழுது பல பொய் மற்றும் கற்பணை சங்கதிகளை முன்வைத்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும்,

(3-3) மேலும் மனுதாரர்கள் அவர்களது மனு பிரமாணப்பத்திரிக்கையில் ஒப்புக்கொண்டுள்ள படியே மேற்படி அசல் வழக்குவில் இந்த எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைமனு எண். 03/2021 மனுவில் வழக்கறிஞர் அறிவிப்புவை 18.03.2022-ம் தேதியே பெற்றுக்கொண்ட போதும் மற்றும் நீதிமன்ற அறிவிப்புவை இம்மனு மனுதாரர்கள் 11.04.2022-ம் தேதியிலேயே பெற்று கொண்ட போதிலும் மற்றும் மேற்படி வீதமான 29.04.2021-ம் தேதியிட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை பற்றி நன்கு அறிந்து கொண்ட போதிலும் வேண்டுமென்றே தீய எண்ணம் கொண்டு உடனடியாக மனு தாக்கல் செய்யாமல் இவ்வாறு வெகுகாலதாமதமாக மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல என்றும்,

(3-4) மேலும் மனுதார்கள் அவர்களது தரப்பில் ஏற்பட்ட ஒவ்வொரு நாள் காலதாமதத்தினையும் சந்தேக மற விளக்க கடமைப்பட்டவர் ஆவர் என்றும், ஆனால் மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணமும் முற்றிலும் பொய்யானதும், கற்பணையானதும் என்றும், இதன்படியே மனுதாரர்கள் தரப்பில் யாதொரு ஆவணமும் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை என்றும், மேலும் 07.07.2022-ம் தேதிக்கு பிறகு 1-ம் மனுதாரர் கோயமுத்தூரில் சிகிச்சை பெற்று வந்ததாக மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ளனர்

என்றும், உண்மையில் 12.07.2022–ம் தேதியில் 1–ம் மனுதாரர் அவரது வழக்கறிஞருடன் இக்கணம் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி மேற்படி இடை மனு எண். 3/2021 மனுவில் எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்றும், இதிலிருந்தே 1–ம் மனுதாரர் யாதொரு நோயினாலும் பாதிக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் யாதொரு சிகிச்சையும் பெற்று கொள்ளவில்லை என்பதும் நன்கு புலனாகும் என்றும், எது எப்படியிருப்பினும் மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணம் வெகு காலதாமதமான 626 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க போதுமானதாக இல்லை என்றும், மேலும் மன்னிக்க கோரும் காலதாமத நாட்களும் தவறானது ஆகும் என்றும், ஆனால் 626 நாட்கள் காலதாமதத்திற்கு எந்தவிதமான ஆவணத்தையும் சமர்பிக்காமலும் தொடரப்பட்ட இம்மனு முதல் நிலையிலேயே தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும், எனவே மனுதாரரின் மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது எனக் கூறி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,

மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்துக்கொள்ள மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட **642** நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க கோரும் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

6. <u>தீர்வு:</u>

(6–1) இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் கடந்த 09.10.2020–ம்

தேதியில் தன்னை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததாலும், தன் தரப்பில் வழக்கறிஞர் நியமனம் செய்யப்படாததாலும், தோன்றாத் தரப்பினராக கருதி 1–ம் பிரதிவாதிக்கும், தனக்கும் எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், கடந்த 02.03.2021–ம் தேதியில் 3–ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், வாதியின் விசாரணைக்குப்பின்னர் கடந்த 29.04.2021–ம் தேதியில் ஒருதலைப்பட்ச தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட காலங்களில் நாட்டில் நிலவி வந்த கோவிட் 19 பெருந்தொற்று சூழ்நிலையில், தாங்கள் நீதிமன்றத்திற்கு ஆஜராக இயலவில்லை என்றும், தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்யக் கோரி மனு தாக்கல் செய்ய இருந்த சமயத்தில் 1–ம் மனுதாரரான தங்களின் தாயாருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு கோயமுத்தூரில் உள்ள சித்த வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை அளித்து வந்ததாலும், தானும் 3–ம் மனுதாரரும் 1–ம் மனுதாரருக்கு துணையாக இருந்து வந்ததாலும், ஆவண நகல்கள் பெற்ற உடனே மனுதாக்கல் செய்ய இயலவில்லை என்றும் கூறி மனுதாக்கல் செய்துள்ளார். ஆனால் தனது மனு சங்கதிகளுக்கு ஆதரவாக தனது தாயாரின் உடல்நிலை பாதிப்பிற்கான மருத்துவ ஆவணங்கள் எதுவும் மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேற்படி மருத்துவ ஆவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்று எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது எதிருரையில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட பின்பும் மனுதாரர் தரப்பில் மருத்துவ ஆவணங்களை முன்னிலைப்படுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. அதே சமயம் 2021–ம் வருடம் கொரோனா பெருந்தொற்று ஏற்பட்டது என்பது

ஏற்றுக்கொள்ளத்தக்க சங்கதியாகவே உள்ளது. மேலும் தாவாவானது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தாவாவில் இருதரப்பு விசாரணைக்கு பிறகு வழங்கப்படும் தீர்ப்பே சரியான இயற்கை நீதியாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. அதேசமயம் மேற்படி காலதாமதத்தால் எதிர்மனுதாரர் / வாதிக்கு ஏற்படும் சிரமத்தை இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டு இம்மனுவை நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என முடிவு செய்கிறது.

**முடிவாக, இம்மனுவின் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.3,000/- செலவுத் தொகையாக வருகின்ற 28.11.2024-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. அழைக்க 28.11.2024.**

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக உரைக்கப்பட்டு அவரால் கணிணியில் வடிவமைக்கப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 21.11.2024-ம் தேதி என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- திருமதி. G. கலைவாணி, பி.ஏ. பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் இருதரப்பு சான்றாவணங்கள்</u>:

இல்லை

ஒம்/- திருமதி. G. கலைவாணி, பி.ஏ. பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.